# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக் கூட்டம்

**2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

அரசாணை (நிலை) எண் 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள்.19.11.2019–ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2019/ஆர்1 நாள்.20.11.2019–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018–ன் படி 01.04.2018–ம் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்து வரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rate's) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017–ம் தேதி முதல் சொத்து வரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்
2. மன்ற அனுமதிக்கலாம்.

   (ந.க.எண்.1690/2018/அ1)

ஆணையாளர் / தனி அலுவலர்
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரண கூட்டம்

**2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

**பொருள்.1**

செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களின் 10/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள்.2**

செங்கல்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் 10/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**பொருள்.3**

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகளை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று டாடா ஏஸ் வாகனங்கள் (1) TN 19 AK 6981 (2) TN 19 AK 6729 (3) TN 19 AK 6703 க்கு இன்ஸ்சூரான்ஸ் தொகை ரூ.72372/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1) அனுமதி அளிக்கலாம்

2) பொது சுகாதார வாகனங்கள் என்பதால் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள்.4**

இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் ஆணையர் ஈப்பு வாகனம் (எண்.T.N.19.J.3325) என்ற வாகனத்திற்கு நான்கு டயர்களும் பழுதடைந்துள்ளதால் புதியதாக வாங்கி தரக்கோரி ஒட்டுனர் E.செல்வம் என்பவர் 01.11.2019 ம் தேதியில் கடிதம் அளித்துள்ளார் அதன்பேரில் உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 2 விலைப்புள்ளிகளை வரப்பெற்றது எனவே புதியதாக 4 டயர்களை வாங்கிட தோராய செலவினம் ரூ.30000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. அவசர அவசியத்தை கருதி குறைந்தவிலைப்புள்ளியினை தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.3474/2019/இ1)

பொருள்.5

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி உரகிடங்கில் உள்ள குப்பைகளை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் Biomining பணிக்கு மூன்றாம் நபர் ஆய்வு கட்டனமாக ரூ.14,16,000/– ஐ இயக்குனர் CES அண்ணா பல்கலைக்கழகம் சென்னை–25 அவர்களுக்கு செலுத்த வேண்டி மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பொது நிதியில் இருந்து வழங்கலாம் பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்.6

செங்கல்பட்டு நகராட்சி சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையமான பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டியில் இயக்கப்படும் 60 HP-2 Nos மோட்டார்கள் முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலையில் இத்திட்டம் துவங்கப்பட்டிலிருந்து 7 (அ) 8 முறைகள் பழுது நீக்கப்பட்தன் காரணமாகவும் மேற்கண்ட மின் மோட்டார்கள் Decon நிறுவனத்திற்கு பழுது நீக்க அனுப்பட்டதில் பழுது நீக்க இயலாது என தெரிவித்தன் அடிப்படையில் மேற்கண்ட மின்மோட்டார்கள் 60 HP, 1500 LPM X 80 ml hoad submerice vertical-2 எண்ணிக்கை புதியதாக வாங்கவும். மேலும் 300 CI பைப் லைன் மோட்டார் அருகாமையில் NON Rotin வால்வு–2 எண்ணிக்கை புதியதாக வாங்கி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.5.38/– இலட்சத்திற்கு இப்பணி மேற்கொள்ள மன்ற பொருள் வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதி (அ) பொது நிதிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

பொருள்.7

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட தூக்குமரகுட்டை நுண்ணிய பசுமை உரகுடில் பகுதியிலும், பெரியமணியக்கார தெரு நீர்தேக்க தொட்டி வளாகத்திலும், குண்டூர் OCC வளாகம் அருகிலும், (E-Waste, Type chappal, tube Hazardon waste) போன்றவற்றை தனித்தனியாக பிரித்து சேகரித்து தொட்டிகள் அமைத்து RRC (Resource Recovery Center) அமைக்க மதிப்பீடு ரூ.14.00 இலட்சம் ஆகும். பணியினை தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் அனுப்பப்படுகிறது.

அ.கு—

மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள்.8

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியான பழவேலி நிலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள பழைய தட்டான்மலை மற்றும் புதிய தட்டான் மலை, ரேடியோ மலை, புதிய TWAD Brand Schone ஆகிய ஆற்று படுகையில் உள்ள 5 உறிந்த கிணறுகள் உள்ள மோட்டார், தலை நிரேற்றும் நிலையத்தின் உள்ள 70 HP 2 எண்ணிக்கை, 50 HP 2 எண்ணிக்கை மோட்டார் பம்பு, ஸ்டாட்டர்ட், கேபில் ஆகிய பகுதிகளில் உடக்குடன் மோட்டர்களில் பழுகளை சரிசெய்ய வேண்டி தயாரிக்க மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்ற பொருள் அனுமதி வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2982/இ2/2018)

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. 2019—20—ம் ஆண்டின் பணி மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.9

செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் லாரி TN19 F 1668 தகுதி சான்றை புதுபிக்க வேண்டியுள்ளதால் மதிப்பீடு ரூ.1.50/— லட்சம் ஆகும் குடிநீர் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றப் பொருள் வைக்க அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

பொருள்.10

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஜெ.சி.கெ நகரில் உள்ள மழைநீர் வடிகால்களில் உள்ளவற்றை பொக்ளின் கொண்டும் ஜெ.சி.பி. கொண்டும் அகற்றப்பட்டது. மழைநீர் வடிகால் பகுதியில் அகற்றப்பட்ட மண்ணை மழைநீர் வடிகால் பகுதியிலேயே புனித ஜோசப் பள்ளி பின்புற வனாகத்திலும், புனித மரியன்னை பள்ளி வளாகத்திலும். பின்புறமும், கொட்டப்பட்ட தூர் மண்ணை அகற்றுவதற்கும், நிஞ்சல் மடு பகுதியிலும், களத்தூரான் கால்வாய் பகுதியிலும் மண் மூட்டைகள் அடுக்குவதற்கு மதிப்பீடு ரூ.0.80 இலட்சம் மன்றப் பொருள் வைக்க வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்.11

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட ஜெ.சி.கே நகர் களத்துமேடு, பாரதி நகர், அண்ணா நகர், திம்மராஜகுளம், அனுமந்தபுத்தேரி, முனிசிபல் காலணி, வரதராஜ நகர், வேதாசல நகர், குண்டூர், ராகவனார் தெரு, கோகுலபுரம், புது ஏரி போன்ற பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் வாய்களை தூர்வாரி அதை சுத்தம் செய்யும் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு 29.07.2019 தீர்மானம் 848 நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 12.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின் வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிகுட்பட்ட ஜே.சி.கே. நகர், களத்துபேடு, பாரதி நகர், அண்ணா நகர், திம்மராஜகுளம், அனுமந்தபுத்தேரி, முனிசிபல் காலணி, வரதராஜ நகர், வேதாசலம் நகர், குண்டூர், ராகவனார் தெரு, கோகுலபுரம், புதுஏரி, போன்ற பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் வாய்ககளை தூர்வாரி அதை சுத்தம் செய்யும் பணி. | ரூ.3.00 இலட்சம் | 1.திரு.கே.வெங்கடேசலு 0.28% குறைவு |
| | | | 2.திரு.இ.சந்திரன் 0.25% அதிகம் |

குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்.12

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–2020 ஆம் நிதியாண்டில் குடிநீர் நிதியின் கீழ் வரும் பணிகள் செய்ய 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | திம்மாவரம் நீரேற்று நிலையத்தில் 30HP மின் மோட்டார் 2HP, 1HP மின் மோட்டார், ஸ்டார்ட்டர் பம்பு, கேபிள் பழுது பார்க்கும் பணி. | 5.00 இலட்சம் | ஆனந்த எண்டர்பிரைசஸ் | 0.14 அதிகம் |
| | | | அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 0.08 குறைவு |
| 2 | சப்கலெக்டர் ஆபிஸ், பாசித் தெரு, பெரியமணியக்காரத் தெரு, மற்றும் வடமலை பூஸ்டர் நீரேற்று நிலையங்களின் மின் மோட்டார்கள் ஸ்டார்டர்கள் கேபிள்கள், பம்பு பழுது நீக்கும் பணி. | 6.00 இலட்சம் | அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 0.03 குறைவு |
| | | | ஆனந்த எண்டர்பிரைசஸ் | 0.03 அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

அ.கு–

1. மன்றம் ஏற்கலாம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் ஏற்கலாம்.

பொருள்.13

செங்கல்பட்டு புதிய மாவட்டமாக அறிவிக்கப்படுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாவட்டம் துவக்க அடிக்கால் நாட்டு விழாவிற்கு வருமை தர உள்ள போது இந்நகராட்சியின் மூலம் தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும்போது இந்நகராட்சியில் பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் எண்.TN.19J 3325 வாகனம் தற்செயலாக பேரிஸ் பழுது அடைந்து இயங்க முடியாத நிலையில் இருந்ததால் மேற்படி வாகன ஒட்டுனர் திரு.E.செல்வம் என்பவர் ஈப்பு வாகனத்தை சரி செய்ய ரூ.7440/– செவவு செய்யப்பட்டு அதற்கான தொகையை திரு.தமிழ் செல்வன் ஆட்டோ மொபைல் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் ஈப்பு வாகனம் செலவு தொகை வழங்க மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

பொருள்.14

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் கதவு எண்.29–ல் அமைந்துள்ள திரு.டி.ராஜாசிங் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்க்கு விதிக்கபட்ட சொத்து வரியினை எதிர்த்து செங்கல்பட்டு மாவட்ட முன்சீப் கோர்ட்டில் OS 71/2001 என்ற எண்ணில் வழக்கு தொடரபட்டு நடைபெற்று வந்த நிலையில் 30.06.2008 ல் வழங்கிய தீர்ப்பில் வரி விதிப்புதாரருக்கு விதிக்கப்பட்ட சொத்துவரி விதிப்பு தவறானவை எனவும் (வரி.வி.எண்.17032&17033) அதனை சரி செய்து புதிய கேட்பு அறிவிப்பு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி வரிவிதிப்பிற்கான இடத்தினை வருவாய் உதவியாளர்கள், மற்றும் வருவாய் ஆய்வாளர் மூலமாக ஆய்வு செய்து அளவீடு செய்யப்பட்டதில் மனுதாரருக்கு அடிமனை 671ச.இ மட்டுமே உள்ளது இதில் தரைத்தளம் 598 ச.அ மற்றும் முதல் தளம் 507ச.அ என மொத்தம் 1105 ச.அ கொண்ட RCC தளம் போடபட்ட வணிக பயன்பாட்டு கட்டிடம் உள்ளது. இதற்க்கு வரி விதிப்பு எண்.17032 –ல் 1350 ச.அ மற்றும் வ.வி.எண்.17033–ல் 1350 ச.அ என கூடுதலாக 1595 ச.அ க்கு வரிவிதிப்பு தவறுதலாக செய்யப்பட்டுள்ளது என தெரியவருகிறது. மேலும் ஒரு வரி விதிப்பிற்கு பதிலாக இரட்டை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி டி.ராஜாசிங் என்பவருக்கு வித்திகப்பட்ட இரட்டை பதிவு வரிவிதிப்பு எண்ணில் ஒன்றான வரிவிதிப்பு எண்.018/17033 யை 1999–2000 –II முதல் 2019–20–II ம் அரையாண்டு வரையில் நீக்கம் செய்யவும் ரூ.348500/– கேட்பினை வஜா செய்திடவும் மற்றும் 018/17032–ல் 1350 ச.அ என்பது தற்போது உள்ள 1105 ச.அடியினை விட கூடுதலாக உள்ளதால் அவற்றை நிறுத்திக் கொள்ளவும் மற்றும் கேட்பு அறிவிப்பு சார்வு செய்து வசூல் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2044/2019/அ1)

பொருள்.15

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு செங்கல்பட்டு புதிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் 29.11.2019 அன்று விழா நடைபெற உள்ளதால் ஆயத்த பணிகள் நடப்பெற்று வருகிறது. நகரிலும் நகரின் அல்லையிலும் விழா நடப்பெறும் இடத்திலும் நாய்கள் நிறைத்துள்ளதால் அவசர அவசியம் கருதி உடனே 100 நாய்களை பிடித்து 2 நாட்களுக்கு வைத்திருக்கவும் அதற்கான தடுப்பூசி மற்றும் அறுவை சிகிச்சைகனை மேற்கொள்ள தோராய செலவினமாக 50,000 (ஐம்பதாயிரம் ரூபாய்) க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியத்திநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரிக்கலாம்.

பொருள்.16

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 29.11.2019 அன்று செங்கல்பட்டு புதிய மாவட்ட தொடக்க விழாவிற்கு தமிழ முதல்வர் வர இருப்பதால் துப்புரவு பணியாளர்கள் பயன்படுத்துவதற்கு எளிதாக (குப்பைகளை அப்புறபடுத்துவதற்கு) சாக்கு பைகள் (பெரிய அளவிலான போராபைகள்) தேவைப்படுவதால் அவற்றை வாங்குவதற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.10,000 மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம் அவசர அவசியத்திநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரிக்கலாம்.

பொருள்.17

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரியின் உள்ள 5HP டீசல் என்ஜீன் பழுது ஏற்பட்டு முற்றிலும் இயங்காமல் உள்ளது. எனவே, லாரியின் பின்புறம் (PTO) SHP டீசல் என்ஜீன் சரிசெய்யும் அதற்கான உதிரிப் பொருட்களை மாற்றி இயக்கத்தில் வைக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிபீட்டு தொகை ரூ.55,000/– க்கு மன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ஆணையாளர் / தனி அலுவலர்
செங்கல்பட்டு நகராட்சி